இணைந்த சேவைகள் சுற்றறிக்கை: 01/2014

எனது இல: PA/CS/6/4/E.B E III
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07
2014.04.04

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள்

<u>அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை</u>

அரச சேவையின் கனிஷ்ட ஊழியர்கள் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு பதவியுயர்வுக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் 2007.07.01, 2009.02.02 மற்றும் 2009.04.02 ஆந் திகதிகளில் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III தொடர்பில் நடாத்தப்பட வேண்டியிருந்த வினைத்திறன்காண் தடைப்பரீட்சையினை நடாத்தாமையின் விளைவாக அதனை சித்தியெய்வதற்கு அவர்களுக்கு, நியமனத் திகதியிலிருந்து நான்கு தடவைகளில் நடாத்தப்பட்ட வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பின்வரும் விதத்தில் சலுகைக்காலம் ஒன்றினை வழங்குவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

| பரீட்சைத் தவணைகள் | நியமனத் திகதி | சலுகையினை வழங்குவதற்காகக் கருத்திற்கொள்ளப்படும் பரீட்சை நடைபெற்ற திகதிகள் | நியமனத் திகதி | சலுகையினை வழங்குவதற்காகக் கருத்திற்கொள்ளப்படும் பரீட்சை நடைபெற்ற திகதிகள் | நியமனத் திகதி | சலுகையினை வழங்குவதற்காகக் கருத்திற்கொள்ளப்படும் பரீட்சை நடைபெற்ற திகதிகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2007.07.01 | 30.08.2008 | 2009.02.02 | 26.07.2009 | 2009.04.02 | 17.07.2010 |
| 2 | | 26.07.2009 | | 17.07.2010 | | 01.10.2011 |
| 3 | | 17.07.2010 | | 01.10.2011 | | 27.01.2013 |
| 4 | | 01.10.2011 | | 27.01.2013 | | ........... |

2. அதற்கிணங்க, மேற்படி திகதிகளில் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் நான்கு பரீட்சை தவணைகளுக்குள் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சையினைப் பூர்த்திசெய்திருப்பின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படமாட்டாது என்பதுடன் அப் பரீட்சையினை பூர்த்தி செய்யாத அலுவலர்களின் தகுதிகாண் காலப்பகுதியானது அவர்கள் வினைத்திறன்காண் தடையினை பூர்த்தி செய்யும் திகதி வரை நீட்டிக்கப்படும்.

3. மேற்படி பந்தி 02 இல் குறிப்பிடப்பட்டவாறு வினைத்திறன்காண் தடைப்பரீட்சையினை சித்தியடையும் அலுவலர்களின் தகுதிகாண் காலப்பகுதியினையும் அவர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைத்தலினையும் திருத்துவதற்கு நிறுவனத் தலைவருக்கூடாக கோரிக்கைகளை அனுப்பி வைக்குமாறு மேலும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஒப்பம் / கே.வீ.பி.எம்.ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்